# <u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்.</u>

# <u>MCOP. No.193/2022</u>

PW–1 முத்துலட்சுமி Date. 30.10.2025

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை. விபத்து சம்மந்தமாக நான் தான் காவல்நிலையத்தில் புகார்கொடுத்தேன். என்அக்காவான 1ம் மனுதாரருக்கு திருமண ஆகவில்லை. அவர் வெங்கடேசபுரகாலனியில் இருக்கிறார். எனக்கு திருமணம் ஆகிவிட்டது. என்னை செஞ்சேரியில் திருமணம் செய்து கொடுத்தார்கள். நான் 12ம் வகுப்பு முடித்துள்ளேன். நான் கொடுத்த புகாரில் என்அம்மாவின் வயது 70 என்று நான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் எனக்கு தெரியவில்லை. மருத்துவ ஆவணங்களில் என்அம்மாவின் வயது 70 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியவில்லை. என்அம்மாவின் வயதை காண்பிபதற்கு ஆதார் அட்டையோ அல்லது வேறு ஆவணங்களோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்அம்மா இறந்தபின்னர் பிரேத கூராய்வு செய்யவில்லை என்றால் சரிதான். விபத்துக்கு முன்பு என்அம்மாவிற்கு உடல்நிலை சரியில்லாமல் இருந்தது என்றால் சரியல்ல. தனியார் மருத்துவமனையில் இருந்து என்அம்மாவை டிஸ்சார்ஜ் செய்யும்போது ஏதாவது தொந்தரவு இருந்தால் மருத்துவமனைக்கு வருமாறு சொன்னார்கள் என்றால் சரிதான். அதன்பிறகு தனியார் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு நாங்கள் செல்லவில்லை என்றால் ஒருமுறை போனோம். ஏற்கனவே என்அம்மாவிற்கு இருந்த உடல்நலகுறைவு மற்றும் வயது காரணமாக இறந்துவிட்டார் என்றும், பிரேதகூராய்வு செய்தால் அந்த விவரம் தெரிந்துவிடும் என்பதால் பிரேதகூராய்வு செய்யவில்லை என்றால் சரியல்ல. என்அம்மாவின் வருமானத்தை காண்பிபதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால்சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வழக்கிற்காக தாக்கல் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. வாகனம் வருவதை கவனிக்காமல் என்அம்மா சாலையை கடந்ததால் தான் விபத்து நடந்தது என்றும், அவ்வாறே இறுதிஅறிக்கை தாக்கல்

செய்யப்பட்டது என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் ஓட்டுநர் இளவர் என்பதால், பாலிசி விதிமீறல் உள்ளதால் 2ம் எதிர்மனுதாரர் நஷ்டஈடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. நான் என்அம்மாவின் வருமானத்தை சார்ந்து வாழவில்லை என்பதால் என்னைபொறுத்து மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:</u>**

இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.